திரு. எம்.சுரேந்திரன் : தலைவரவர்களே, கடந்த ஆண்டில் சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே எவ்வளவு சிறு தொழில்கள் இப்போது ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. எந்தெந்தப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படு கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லாத் தொழில்களும் ஆரம்பிக்கப் பட்டு இருக்கின்றன. பல விதமான பொருள்கள உற்பத்தி செய்யப்படு கின்றன. என்னென்ன பொருள்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்போது பதிவு செய்யப்பட்ட தொழில்கள் பெரும்பான்மையாக எந்த வகையான பொருள்களை தயாரிக் கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் முதலிலேயே சொல்லி விட்டேன். அதைத்தான் அவர்கள் முன்புகேட்டார்கள். அந்த விவரம் என் னிடத்தில் இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, may I know how many small scale industries were closed last year?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறுதொழில்களுக்கு பெரும்பாலும் அப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுவது இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சிறுதொழில்கள் துவங்குவதிலே, பதிவு செய்யப் படுவதிலே இருக்கிற விதிமுறைச் சங்கடங்களினாலே கால தாமதம் ஏற்படுகிறது. எஸ்.எஸ்.ஐ. சர்டிபிகேட் வாங்குவதற்கு வீட்டினுடைய சொந்தக்காரர் இடத்திலிருந்து சர்டிபிகேட் பெற்று, நகர மன்றத்திற்கு லைசென்சுக்காக செல்லவேண்டியிருக்கிறது. நகர மன்றத்திற்கு லைசென்சுக்காக அப்ளை செய்தால் ஒரு வருடம், 1½ வருடம் கூட காலதாமதம் ஆகிறது. இந்த எஸ். எஸ். ஐ. சர்டிபிகேட் வழங்குவதற்கு இடம் இருந்தால் மட்டும் போதும் என்று சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அப்படி எடுத்தால் அது சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான்கு ஆண்டுகளில் இரண்டு மடங்கு அதிகமாகி இருப்பதிலிருந்தே காலதாமதங்கள் தவிர்க்கப்பட்டு இருக்கின்றன என்பதை அறியலாம். அவர்கள் சொன்னது போல் இன்னும் பல்வேறு துறை களில் இப்படி காலதாமதம் ஏற்படுகிறது. இப்போது புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு என்று எஸ். எஸ். ஐ. யூனிட்டில் பதிவு செய்து கொண்டுள்ள சிலர், வேறு துறையில் சம்பாதிக்கலாம் என்று பார்க்கிறார்கள். அவர்களையும் அரசு நினைவில் கொள்ளவேண்டியிருக்கிறது. ஆகவே தான் இத்தகைய விதி முறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் காலதாமதத்தை தவிர்க்க அரசு எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that this is one of the most important methods by which we can reduce the unemployment problem and increase production, may I know whether it is possible for the Gove[illegible]ment to appoint a high

1971 அக்டோபர் 25]

officer to find out where exactly the delay occurs especially with regard to the grant of financial assistance and also to take follow-up action in view of what the Hon. Minister has stated just now, namely, that nearly double the number of registration has taken place? Will the Government take more interest in the matter and see that these industries make production continuously for at least a few years?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிதி உதவியைப் பொறுத்த வரையில் கஷ்டம் இருப்பதாக நான் இது வரையில் அறியவில்லை. காரணம் நம்முடைய அரசு உதவியிலிருந்து ரூ. 30 லட்சம் கொடுக்கப்படுகிறது. இப்போது புதிதாக 'சிஸ்கோ' துவங்கி இருப்பதால், அதன் மூலமாக ஏராளமாக கடன் உதவி இந்த சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் மூலமாக இது வரையில் பெரிய தொழில்களுக்குத் தான் அதிகமாகக் கடன் உதவி அளிக்கப்பட்டு வந்தது. இப்போது அந்த வாரியம் சிறு தொழில்களுக்கும் உதவி செய்ய முன்வருகிறது. ஆகவே நிதி உதவியைப் பற்றி குறைபாடு இல்லை. இருக்கிற கஷ்டம் எல்லாம், மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை என்பது தான். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்களுக்கும், ஏற்கெனவே நடந்து வரும் தொழில்களுக்கும் மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை. ஆகவே எக்ஸ்பேன்ஷன் செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதற்கு, மத்திய அரசாங்கத்தின் கொள்கைதான் காரணம். அவர்கள், இவ்வளவு தான் மூலப்பொருள்கள் கொடுக்கமுடியும் என்று ஒதுக்குகிறார்கள். அதைத்தான் நம்மாலே பகிர்ந்து கொடுக்க முடிகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Government show some special privileges to those small scale industries which would be started in the most backward districts like Ramanathapuram and Dharmapuri?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பல மாவட்டங்களை நாம் பின் தங்கிய மாவட்டங்கள் என்று அறிவித்து, அந்தப் பகுதிகளிலே தொழில்கள் தொடங்குகிறவர்களுக்கு அதிகமான பண உதவி செய்கிறோம். பொதுவான சலுகைகள். கன்சஷன்ஸ் கொடுத்து வருகிறோம். இவையெல்லாம் மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலோடு செய்து வருகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவாகளே, இந்தச் சிறு தொழில்கள் தொடங்குவதில் உள்ள கஷ்டம் மூலப் பொருள்கள் கிடைக்காததுதான் முக்கிய காரணம் என்றுசொன்னார்கள். அப்படியே மூலப்பொருள்கள் கிடைத்தாலும் அங்கே உற்பத்தியாகும் பொருள்கள் விற்பனையாவதில் கஷ்டம் ஏற்படுகிறது. இதனால் சிறு தொழில் செய்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள் ஆகவே, அரசாங்கமே இந்த விற்பனை செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்தினால், அந்தத் தொழில்களைப் பாதுகாகமுடியும். அவ்வாறு செய்ய அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக, சிறு தொழில்களுக்கு மூலப் பொருள்கள் வாங்கிக்கொடுப்பதில் அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொண்டு இருக்கிறது. மார்க்கெட்டிங் பெசிலிடீஸ் கொடுப்பது என்பது சிரமமான காரி

பம். அப்படி இருந்தபோதிலும், சிறு தொழில் அதிபர்களை, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும், ஒன்று சேர்த்து, ஒரு குழு அமைத்து, அவர்களே, சந்தையைத் தேடிக்கொடுப்பதில் முயற்சி எடுத்து வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, கனம் அமைச்சரவர்கள் மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையோடுதான் சில சலுகைகள் கொடுப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்தை கேட்காமலேயே, மாநில அரசாங்கத்திடம் இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மின்சார சார்ஜல், மற்ற வரிகள் எல்லாம் குறைத்து, அதன் மூலம் ஏதாவது சலுகை கொடுக்க மாநில அரசாங்கம் உடனடியாக ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பல மாதங்களுக்கு முன்பே நடவடிக்கை எடுக்கப்பட்டு, பின் தங்கிய மாவட்டங்களுக்கு என்று சில சலுகைகள் மாநில அரசு அளித்து இருக்கிறது என்று பத்திரிக்கைகளில் வந்து இருந்ததை அவர்கள் படித்து இருக்கலாம்.

THIRU M. A. LATHEEF: Sir, will the Hon. Minister be pleased to specify the number of tanneries that had been started last year under the small-scale industries. Also in view of the foreign exchange earning capacity of these industries, has the Hon. Minister got any proposal to give incentives and encouragement to the new industries that are to be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: டானரியைப் பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை.

சென்னை விமான நிலையத்தில் புதுக் கட்டடங்கள்.

* 60 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை விமான நிலையத்தில், புதிய கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதித்து உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

(அ) மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சென்னையில் முடியும் விமான போக்குவரத்துக்கான வசதிகள் அளிக்கும் புதிய கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கான திட்டங்கள் மத்திய அரசின் வசம் உள்ளன.

(இ) இதைத்தவிர வேறு விபரங்கள் இவ்வரசினிடம் தற்போது இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: இண்டர்நேஷனல் ஏர்போர்ட்ஸ் இருப்பது போல, சென்னை மீனம்பாக்கம் ஏர் போர்ட்டையும் புதுப்பிக்கத் திட்டம் இருக்கிறதா? இதுபற்றி மத்திய சர்க்காரோடு பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறது; நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கயத்தாறுக்கு அருகிலுள்ள விமான தளம்

* 61 வினு.—திரு. எம் முத்தையா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கயத்தாறுக்கு அருகிலுள்ள விமான தளத்தை விமானப் பயிற்சி நிலையமாக்குவது சம்பந்தமாக மத்திய சர்க்காரிடமிருந்து மாநில அரசுக்கு தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, இந்தக் கயத்தாறு விமான தளத்தை அபிவிருத்திசெய்தால், தூத்துக்குடி துறைமுகத்திற்கும், கோவில் பட்டி, திருநெல்வேலி மாவட்டத்திற்கும் போக்குவரத்து வசதி ஏற்படும். ஏற்கனவே தூத்துக்குடி துறைமுகத்திற்கு ஒரு விமான வசதி ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய சர்க்கார் ஆலோசித்துக் கொண்டு இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்த கயத்தாறு தளத்தை விருத்திசெய்வதில் நம் அரசாங்கத்திற்கு செலவு இல்லாமல் செய்யலாம் என்று கருதுகிறேன். ஆகையால், மாநில அரசு மத்திய அரசோடு இதுபற்றிப் பேசி, சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தூத்துக்குடி துறைமுகத்திற்கு அருகே ஒரு விமானநிலையம் அமைக்க செயற்குறிப்பு இருக்கிறது. இந்தக் கயத்தாறு தளத்தை உபயோகிக்கும் செயற்குறிப்பு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தூத்துக்குடிக்கு அருகாமையில் இருக்கும் இடத்தில் ஏர்-ஸ்ட்ரிப் அமைக்க செயற்குறிப்பு இருக்கிறது என்கிறுர்கள். அது எவ்வளவு சீக்கிரத்தில் அமைக்கப்படும்? அதுபற்றி, மத்திய சர்க்காரை வலியுறுத்த நம் அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம். இந்த விமான தளத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

Export of Bananas

* 62 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to have a special drive for the export of Bananas from this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) வாழைப்பழ உற்பத்தியைப் பெருக்கவும், இப்பயிர் சாகுபடியாகும் பரப்பை அதிகரிக்கவும், தீவிரசாகுபடித் திட்டமொன்று வட ஆற்காடு, செங்கற்பட்டு, மதுரை, கோயம்

புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. உள் நாட்டுத் தேவையை பூர்த்தி செய்ய, பூவன், மொந்தன் முதலிய ரகங்களின் உற்பத்தியைப் பெருக்கவும், உலகநாட்டுச் சந்தைகளின் தேவைக்கேற்ற ஏற்றுமதிக்கான குட்டை வாழைகள் உற்பத்தியாகும் பரப்பை அதிகரிக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ், நவீன சாகுபடி முறைகளைக்கையாள அறிவுறுத்தப்படுகிறது. நோயற்ற வாழைக்கன்றுகள் சாகுபடியாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன. ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000 வீதம் குறுகிய காலக்கடன்கள் சாகுபடியாளருக்கு அளிக்கப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், வாழை உற்பத்தியில் இத்தனை அக்கறை எடுத்துக் கொண்டு ஆதரவு கொடுக்கிறார்கள். உற்பத்தியான வாழைக்கு சந்தை தேடுவது பெரிய பாடாக இருக்கிறது. வாழையைச் சரியான விலைக்குக் கொடுக்கக் கூடிய சந்தையையும் ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது அது சம்மந்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொன்ன நேரத்தில், பலவேறு மாவட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், அதில் தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இப்படிப் பட்ட உற்பத்தித் திட்டம் தஞ்சையில் இருக்கிறதா ? உற்பத்தியாகும் வாழைப் பழத்தை கொண்டு 'பழை பவுடர்' செய்யக் கூடிய சிறு தொழிலை நிறுவி, அயல் நாட்டு உதவியோடு அப்படிப் பட்ட தொழில் அமைக்க திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தஞ்சை மாவட்டத்தில் தீவிர விவசாயத் திட்டம் அமுலில் இருக்கிறது. அதிலே வாழை சேரவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புத் திட்டத்தை திருநெல்வேலிக்கு அருகாமையில் உள்ள ஜில்லாவில் அமுல் செய்தால், தூத்துக்குடி வழியாக வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்ய வசதியாக இருக்கும் என்பதால், அப்படிப் பட்ட திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, ஏற்றுமதிக்குப் பயன்படும் இந்தக் குட்டைவாழைக்கு ஒரு நோய் ஏற்படுகிறது. விவசாயத் துறையில் இதற்கு 'டையடின்' என்கிற பூச்சி மருந்தை அடிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அப்படி அடித்தாலும், வாழையின் நோய் நீங்குவதில்லை. ஆகவே, வாழைக்கு இருக்கும் இந்த நோயைப் போக்கும் வகையில், புதிய முயற்சிகளை அரசு மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதுபற்றி தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் சேர்க்கப் பட்டிருக்கிறது. அதில் தீவிர கவனம் செலுத்தப் படுகிறது. அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.